மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

# க.பொ.த (உ/த)ப் பரீட்சை – 2019

## மாணவர்களுக்கான உதவிக் கருத்தரங்கு

# இந்து சமயம்

### பகுதி - I

**01.** 1) இந்து சமயத்தின் சிறப்புகள் எவை?

- ❖ உலகில் தோன்றிய பழைமை மிக்க சமயங்களுள் ஒன்று
- ❖ பரந்த நோக்குடையது
- ❖ சனாதன தர்மம் என்று அழைக்கப்படுவது
- ❖ இற்றைக்கு 5000 ஆம் ஆண்டுகளுக்கு மேல் பழைமையானது
- ❖ ஆன்மீக வாழ்வுடன் மனித வாழ்வை இணைப்பது
- ❖ ஆச்சிரமதர்ம வாழ்க்கை முறையைப் பிரதிபலிப்பது
- ❖ கோட்பாடுகள் நிறைந்தது.
- ❖ தத்துவ சிந்தனையை பிரதிபலிப்பது
- ❖ ஆன்மீக விடுதலைக்குரிய வழியை வெளிப்படுத்துவது
- ❖ மனிதனை வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது
- ❖ நற்பண்புகளையும் விழுமியப் பண்புகளையும் வெளிப்படுத்துவது
- ❖ பயன்கருதாத கடமைக்கு முக்கியத்துவம் கொடுப்பது
- ❖ கலைகளின் வளர்ச்சியில் கூடிய பங்காற்றுவது
- ❖ உலகில் உள்ள பல்வகைச் சமயங்களிலும் சிறப்பானது. அத்துடன் எல்லா மதக் கருத்துகளையும் ஏற்றுக் கொள்வது

02. இந்து சமய வரலாற்று மூலங்கள் எவை?

- ❖ கல்வெட்டுக்கள்
- ❖ தொல்பொருள் சின்னங்கள்
- ❖ இலக்கிய ஆராய்ச்சிகள்
- ❖ பிற நாட்டார் குறிப்புகள்

3) சிந்துவெளி கால சமயநிலை

- ❖ சிவ வழிபாடு - இலிங்கக் கற்கள்
  யோகியின் வடிவம்
- ❖ சக்தி வழிபாடு - மரதேவதைகள்
  பூமித்தாய் வழிபாடுகள்
- ❖ நாக பாம்பு பால்குடிக்கும் காட்சி (தாயத்தில்)
- ❖ விருட்ச வழிபாடுகள்
- ❖ சூரிய வழிபாடு
- ❖ கிருஷ்ண வழிபாடு
- ❖ முத்திரையில் காணப்பட்ட பூசைத்தட்டுகள் தொடர்பானது

04. வேத கால சமயநிலை

- ❖ இயற்கை வழிபாடுகள்
- ❖ அக உருவ வழிபாடுகள்
- ❖ பல தெய்வ வழிபாடுகள் (33க்கும் மேற்பட்ட தெய்வங்கள்)
- ❖ ஒரு தெய்வ வழிபாடுகள்
- ❖ அட்டதிக்குப் பாலகர்கள் வழிபாடு
- ❖ யாகங்கள்/கிரியைகளில் கடவுளின் முக்கியத்துவம்

05. வேதங்களில் தத்துவம்

- ❖ பரம்பொருள், ஆன்மா. பிரபஞ்சம் தொடர்பான விடயங்கள்
- ❖ நாஸதீய சூத்தம், ஐம சூக்தம், வர்ணசூக்தங்களில், காணும் விடயங்கள்

- ❖ ரிக் வேத 1:164:46 பாடலில் காணப்படும்
"ஏகம் சத்விப்ரா பகுதா வதந்தி" எனும் ஒரு கடவுள் கொள்கையில் பிரதிபலிப்பு
- ❖ இந்து மெய்யியலின் சிந்தனை
- ❖ ரிதம் பற்றிய கருத்து
- ❖ ஆன்மாவின் நிலை
- ❖ பிரபஞ்சம் தொடர்பான சிந்தனைகள்

06. வேதங்களின் முக்கியத்துவம்
- ❖ இந்து மதத்தின் முதல் நூல்
- ❖ இந்த மதத்தின் பொது நூல்
- ❖ சமயம். இறைநம்பிக்கை தத்துவ சிந்தனைகள், அரசியல் சமூகசிந்தனைகள், போன்றவற்றின் வளர்ச்சியில் பங்களிப்பு
- ❖ ஆச்சிரம தர்ம வாழ்க்கை முறையின் வளர்ச்சியின் அடிப்படை
- ❖ உப நிடதங்கள், புராணங்கள். இதிகாசங்கள், பிரம்மசூத்திரம், தர்மசாஸ்திரங்கள் பகவத் கீதை,வேதாந்தம், சித்தாந்தம், அறுவகைச் சமயங்கள், திருமுறைப் பாடல்கள்,அறுவகைத் தரிசனங்கள் போன்றன தோன்றுவதற்கு மூலகாரணமானது ,

07.பல்லவர் கால சமயநிலை ;
- ❖ மன்னர்கள் பணியைத் தெளிவுபடுத்தல்
- ❖ தோற்றத்தின் காரணங்களைக் கூறுதல்
- ❖ மன்னர்கள் தமது வாழ்வில், அரசியலில் எவ்வாறு சமய சிந்தனை மரபுகளைக் கையாண்டார்கள் என்பதை எடுத்துக் காட்டுதல்.
- ❖ மகேந்திரவர்மன், மாமல்லன், பரமேஸ்வரவர்மன் நரசிம்மவர்மனின் பணிகள், பக்தி நெறிகளின் பங்களிப்பு
- ❖ பக்தி நெறிக்காலத்தின் தோற்றம்
- ❖ பக்தி, நெறியாளர்களும் மேற்கொண்ட சமயப்பணிகளும், அவற்றின் சிறப்பும்
- ❖ சமயக்குடியிருப்புகள். சடங்குகளின் பங்களிப்பு பக்தி இலக்கியத்தின் வளர்ச்சி, ஆலய வளர்ச்சியும் சமயச்சடங்குகளும்

08. திருவாவடுதுறை ஆதீனம்
- ❖ காலம், அமைவிடம், பரம்பரை, நிறுவியவர்கள், சீடர்கள், இணைமடங்கள், பிரதான நூல்கள் என்பவற்றைப் பற்றி எடுத்துக் கூறுதல்.
- ❖ சமயப்பணியின் சிறப்பு (மடங்கள்,தலங்கள், நூல்கள்)
- ❖ புலவர்களின் பங்களிப்பு
- ❖ மானியங்கள் பற்றிய சிந்தனை
- ❖ கல்விக்கூடங்கள் நிறுவுதல்
- ❖ சமூக நிறுவனங்களை அமைத்தல் .
- ❖ நூல் வெளியீடு
- ❖ சமூகப் பணிகள்

09. சக்தி வழிபாட்டு முறைகள்
- ❖ யந்திர, மந்திர தந்திர வழிபாடுகள்
- ❖ சக்கர வழிபாட்டின் சிறப்பு
- ❖ தாய் தெய்வ வழிபாட்டின் சிறப்புகள்
- ❖ விரதங்கள்
- ❖ சக்திக்குரிய விழாக்கள்
- ❖ சக்திக்குரிய ஆலயங்களும் அதன் வழிபாடுகளும்
- ❖ சக்திக்குரிய வழிபாட்டுமுறை பற்றிக்கூறும் இலக்கியங்கள்
- ❖ சக்தி வழிபாட்டின் தத்துவம்

10. திருஞான சம்பந்தரின் பணிகள்
- ❖ வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்
- ❖ சமய, சமூகப்பணிகளில் திருஞானசம்பந்தரின் பங்களிப்பு
- ❖ இயற்கை வழியைப் போற்றுவதன் மூலம் மனிதவாழ்வு வளம்பெறப் பாடியமை
- ❖ தேவாரப்பதிகங்கள் பாடியமை
- ❖ தலயாத்திரை மூலம் பக்தியை வளர்த்தமை

- ❖ வாதங்கள் புரிந்து சமயத்தை நிலைநாட்டியமை
- ❖ சிவ சின்னங்களின் பெருமையை உலகறியச் செய்தமை
- ❖ பசிப்பிணி நீக்கியமை
- ❖ மன்னரை மதம் மாற்றினார் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டினார் கலைகளின் வளர்ச்சிக்கு உதவினார் .
- ❖ புராண இதிகாசக்கதைகள், கடவுள் கொள்கைகளை பாடல் மூலம் எடுத்துக் கூறினார்.

11. நம்மாழ்வார் பணிகள்
- ❖ வாழ்வும் பணியும்
- ❖ பணிகள்

  வைணவ சமய உண்மைகளை வெளிப்படுத்தினார். புருடார்த்தம் என்ற மூன்று பிரிவுகளையும், அர்த்த பஞ்சஞானத்தையும், வைணவ தத்துவங்களையும் இறைபற்றிய உண்மைகளையும், இறைவனுக்கு புரியும் கைங்கரியங்களையும், வீடு பேறு முதலானவற்றையும் தமது பாடல்களில் குறிப்பிட்டார்.
- ❖ திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி பாடல்களில் விளக்கம்
- ❖ பிரம்ம சூத்திரம் பற்றிய கருத்துக்கள்
- ❖ தத்துவபரம், உபாசனைபரம் என்பவற்றின் சிறப்புக்கள்

12. கடையிற் சுவாமிகள்
- ❖ இந்தியாவில் பெங்களூரில் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.
- ❖ நீதிபதியாக இருந்தவர் ஸ்ரீநரசிங்க பாரதியாரின் உத்தம சீடர் "முத்தியானந்தர்" எனும் தீட்ஷா நாமம் பெற்றவர்.
- ❖ யாழ்ப்பாணம் பெரிய கடை வீதியை தனது வாழ்விடமாகக் கொண்டவர், செல்லப்பா சுவாமிகள், குழந்தைவேல் சுவாமிகள் போன்றோரை உறவினர் ஆக்கினார்.
- ❖ குழந்தைவேல் சுவாமிகளை உத்தம சீடர் ஆக்கிக் கொண்டார்.
- ❖ நீராவிப்பிள்ளையார் கோவிலில் 1882ல் புரட்டாதி மாத பௌர்ணமி தினத்தில் இறைபதம் அடைந்தார்.
- ❖ பொய் ஒழுக்கம் உடையவர்களை சீரான வழியில் கொண்டு வந்தார்.
- ❖ இரும்பை பொன்னாக்கிக் கொடுத்தார்,
- ❖ மீனவரைக் காப்பாற்றிக் கரைசேர்த்தார்,

13. நடராஜர் மூர்த்தம்
- ❖ "64 இறைமூர்த்தங்களுள் சிறப்பானது
- ❖ இறைவனின் பஞ்ச கிருத்திய தத்துவத்தை உணர்த்துவது
- ❖ சிற்பசாஸ்திர அளவுப் பிரமாணத்தின் படி அமைக்கப்பட்டது.
- ❖ தில்லைச் சிற்றம்பலத்தைச் சிறப்பிக்கின்றது.
- ❖ பஞ்சாட்சர மந்திரத்துடன் தொடர்புடையது
- ❖ ஆடல் வல்லானாக, சிறப்பிக்கப்படுகின்றது
- ❖ திருவாதிரை நாளைச் சிறப்பிப்பது
- ❖ ஐந்தொழில் தத்துவ உண்மைகளை வெளிப்படுத்துவது.
- ❖ நடராஜ மூர்த்தத்தில் காணப்படும் அங்கலட்சணங்கள் உணர்த்தும் உண்மைகள் போன்றவற்றை தெளிவுபடுத்தல் வேண்டும்.

14. கரகாட்டம்
- ❖ அலங்கரிக்கப்பட்ட செம்பை அல்லது பித்தளையிலான குடத்தை ஆட்டக்காரர் தலையில் வைத்துக்கொண்டு மேளப்பின்னணிக்கு ஏற்றவாறு குடம் கீழே விளாதவாறு ஆடுதல் கரகாட்டமாகும்.
- ❖ புனித நீர்தாங்கும் குடம், கமண்டலம், கும்பம், செம்பாட்டம், பூங்குடம், பூப்பந்தம், கரகக்கூத்து என பல பெயரால் அழைக்கப்படுகின்றது.
- ❖ தொல்காப்பியத்தில் கரகத்தின் சிறப்பு
- ❖ கலித்தொகை, புறநானூறு, சிலப்பதிகாரத்தில் கரகம் பற்றிய கருத்து
- ❖ கரகம் ஆடுவதன் நோக்கம் நாட்டில் வரட்சி, நோய் என்பவற்றில் இருந்து விடுபடுவதற்காகும்.
- ❖ ஆலயங்களில், அரங்குகளில், அறுவடையின் போது ஆடப்படுகின்றது.
- ❖ கரகத்தின் அமைப்பும், ஒப்பனையும்
- ❖ கரகாட்டத்தின் வகைகள்
- ❖ ஆடுவோரின் தோற்றம்
- ❖ வாத்திய அமைப்பு
- ❖ சமூகத்தில் அதன் முக்கியத்துவம்

15) 19ம் நூற்றாண்டில் இலங்கையில் ஏற்பட்ட இந்து சமய வளர்ச்சி
- ❖ சூழ்நிலை ,அரசியல் பொருளாதார சமய, கல்வி நிலைகள்
- ❖ ஆங்கிலேயர் ஆட்சியில் ஆங்கிலக்கல்வியும் அரச உத்தியோகமும் அளித்து சைவசமயத்தவர்களை தமது மதமாற்றக்கொள்கைக்கு உட்படுத்தினர்.

- கிறிஸ்தவ மிசனரிமார்களிடம், தங்களது கல்விக் கொள்கையை கையளித்தனர்.
- கிறிஸ்தவ சமய பரம்பலைத் தடுக்கவும் சைவசமயத்தை வளர்க்கவும் 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் பல சைவசமயப் பெரியார்கள் தோன்றினர்.
- சைவசமய முயற்சிகள்
  - பிரசங்கம் செய்தல்
  - கண்டனம் செய்தல்
  - சைவசமய நிறுவனங்கள்
- பாடசாலைகள் அமைத்தல்
- சைவப் பெரியார்களின் தோற்றம்
- அச்சியந்திரசாலைகள் நிறுவுதல் போன்றன தொடர்பானவற்றை உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்தல்.

16) திருக்கேதீஸ்வர ஆலயத்தின் சிறப்பு

- பஞ்ச ஈச்சரங்களில் சிறப்பானது
- மன்னாருக்கு சமீபத்தில் மாதோட்டம் என்ற இடத்தில் அமைந்துள்ளது, புராதன காலத்தில் மஹாதுவட்டபுரம் என அழைக்கப்பட்டது.
- கேது வழிபட்ட ஈச்சரம் மாதோட்டம்
- கேதீஸ்வரம் ராஜராஜபுரம், மகாதேவன் கோவில் என பல பெயர்களினால் அழைக்கப்பட்டதன் சிறப்பு.
- இதிகாச புராணக்கதைகளில் இவ்வாலயத்தின் சிறப்பு
- நாயன்மார்களால் தேவாரம் பாடப்பட்ட திருத்தலம்
- பல்லவ சோழ மன்னர்காலத்தில் சிறப்புப்பெற்ற இவ்வாலயம் மகாதேவன் கோயில் என அழைக்கப்பட்டது
- வரலாறு தொடர்பான நூல்கள்
  - இதிகாச புராணங்கள்
  - மகாவம்சம்
  - தாடவம்சம்
  - தேவாரப்பதிகம்
  - தட்சண கைலாய மான்மியம்
  - பெரியபுராணம்
- இராஜேந்திர சோழனால் புனருத்தானம் செய்யப்பட்டது.
- இலங்கையை ஆண்ட பௌத்த மன்னர்களின் செல்வாக்குப் பெற்றது.
- மூர்த்தி, தலம், தீர்த்த சிறப்புடையது
  - மூர்த்தி - கௌரி அம்பாள், திருக்கேதீஸ்வரநாதர்
  - தீர்த்தம் - பாலாவி
  - தல விருட்சம் -வன்னிமரம்
- விழாக்கள் தொடர்பான சிறப்பு ( நித்திய நைமித்திய பூசைகள், மகோற்சவத்தில் 05 தேர்கள் இழுக்கும் சிறப்பு, சிவராத்திரி விழாவின் சிறப்பு) –
- சமூகப்பணியில் சிறப்பிடம் (மடங்கள், சமய சொற்பொழிவுகள், அன்னதானம் வழங்கல், திருமுறை ஓதுதல்)

17) **மேலதிக வினாக்கள்**

1) அதர்வண வேதத்தின் சிறப்பு
2) சாங்கிய தர்சினத்தின் சிறப்புக்கள்
3) மெய்கண்டதேவர்
4) விநாயகர் வழிபாட்டின் முக்கியத்துவம்
5) ஊடகம் என்பதால் விளங்கிக் கொள்வது
6) கிராமிய வழிபாட்டின் சிறப்பும் கண்ணகி வழிபாடு அல்லது பெரிய தம்பிரான் வழிபாடு
7) சங்கரரின் வேதாந்த தத்துவ சிந்தனை
8) சைவசித்தாந்தம் கூறும் பதி
9) ஆன்மீக விடுதலைக்குரிய வழிகள்
10) திராவிடக் கட்டடக்கலையில் பல்லவர்காலம்
11) விரதம் "என்றால் என்ன?
12) உபநிடத தத்துவ சிந்தனை
13) மதுரை மீனாட்சி அம்மன் ஓவியங்கள்
14) 19ம் நூற்றாண்டில் இலங்கையில் ஏற்பட்ட இந்து சமய வளர்ச்சி
15) திருக்கேதீஸ்வர ஆலயத்தின் சிறப்பு
16) இந்து போர்ட். சு. இராசரத்தினம்/சுவாமி விபுலானந்தர்
17) சாங்கிய தரிசனம்
18) சங்கரரின் வேதாந்த சிந்தனை
19) சைவசித்தாந்தம் கூறும் பதி
20) ஆன்மீக விடுதலைக்குரிய வழிகள்
21) ஆத்திசூடி/ கொன்றைவேந்தன்
22) சிவவிரதங்களும் சிவசின்னங்களும்
23) பஞ்சாங்கம்